★ சார்க் மாநாடு; ஜனாதிபதி பிரேமதாஸவுடன் நரசிம்மராவ்

# கொழும்பில் தனியாகச் சம்பாஷிப்பார்


பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5 00

# முரசொலி

முரசு 35 ஒலி 292 பிரசோறபத்தி கார்த்திகை 15 (01 . 11 . 1991) வெள்ளி


## வருகை உறுதி என்கிறார் ரணில் விக்கிரமசிங்க

சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள கொழும்பு வரவுள்ள இந்தியப் பிரதமர் வி. பி. நரசிம்மராவ் ஸ்ரீலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுடன் தனியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என எதிர்பார்க்கப்படுவதாக 'வெரித்தாஸ்' வானொலி நேற்றிரவு தெரிவித்தது. திரு. ராவ் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு 24 மணித்தியாலங்களில் திரும்பி விடுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. லோகசபை இடைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் விரைவாக திரு. ராவ் தாயகம் திரும்பவேண்டியுள்ளது என ஸ்ரீலங்கா அமைச்சரும் அரசாங்கப் பேச்சாளருமான ரணில் விக்கிரமசிங்க கூறியதாகவும் 'வெரித்தாஸ்' தெரிவித்தது. ஆயினும் பாதுகாப்புக் காரணங்கள் கருதியே அவர் விரைவாகத் திரும்பவுள்ளதாக சில பத்திரிகைகளை மேற்கோள்காட்டி இச் செய்தி மேலும் கூறியது.

★ மகேந்திரராஜா கருத்து; தற்போதைய

# நெருக்கடி நிலை உணர்ந்து பொறுப்புடன் செயற்படுவோம்



''ஸ்ரீலங்கா அரசு தமிழ்மக்களை பட்டினி போட்டு திட்டமிட்டவகையில் வாட்டி வதைக்க முனைப்புடன் முனைந்து நிற்கின்றது. இச் சதிக்குப் பலியாகாமல் எம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பும் கடமையும் சகலருக்கும் உளளது என்பது உணரப்பட வேண்டும். அசாதாரணமானதோர் சூழ்நிலையில் நாம் வாழ்கின்றோம் எனும் உண்மையினைப் புரிந்து செயற்பட்டால் எதிரியின் திட்டம் தவிடு பொடியாகிவிடும்''

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள முன்னணிப் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா நேற்று மாலை கோண்டாவில் தலைமைச் செயலகத்தில்இடம்பெற்றபத்திரிகையாளருடனான கருத்துப் பரிமாறலின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய உணவுப்பங்கீட்டு நடைமுறை பற்றி அவர் பத்திரிகையாளரின் கருத்துக்களைக் கேட்டறிந்துகொண்டதுடன் யதார்த்த பூர்வமாக முக்கிய கருத்துக்களையும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

### தேவை சமநிலை

அவர் கூறினார்: எவரும் பட்டினியால் உயிர் துறக்கும் நிலை உருவாகவே கூடாது, உள்ளதைப் பகிர்ந்துண்ண வேண்டும். சமநிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும் இவையே புதிய நடைமுறையின் அப்பழுக்கற்ற அடிப்படை நோக்கமாகும்,

கடந்த காலத்தை நோக்குமிடத்து சாதாரண நிலையின் போது ஒருவன் தன் பொறுப்பைத் தட்டிக்கழித்து சமூகத்தில் வாழ்ந்தால் அவனை சக மக்களால் விமர்சிக்க முடிந்தது. ஆனால் தற்போது நிலவுவது அசாதாரண சூழ்நிலை மின்சாரமில்லை, எரிபொருள் இல்லை, வழமையான போக்குவரத்து வசதியில்லை கடற்றொழிலில்லை பல் துறைத் தொழில் பாதிப்பு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் பட்டினியால் வாட இடமளிக்கவே கூடாது

### - தலைவர் பிரபாகரன்

''மக்கள் உணவின்றி பட்டினியால் வாடி மடியும் நிலை உருவாக இடமளிக்கவே கூடாது. வாழ்ந்தால் மக்களுடன் வாழ்வோம், மடிந்தால் அவர்களுடனே நாமும் மடிவோம். எமது தேவைக்கென உள்ள உணவுப் பொருள்களை கூட மக்கள் தேவை கருதி அவசியமானால் கொடுத்துவிடவேண்டும்''

இவ்வாறு விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிர

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கனேடிய பத்திரிகையாளர் யாழ்ப்பாணம் வரத் தடை!

கனேடியப் பத்திரிகையாளர்கள் மூவர் யாழ்ப்பாணம் வருவதற்கு வவுனியாவில் உள்ள இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் இவர்கள் கொழும்பிலிருந்து கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு, பூநகரியில் படை பலப்படுத்தப்பட்டது

...டபகுதியில் பூநகரி, ...னயிறவுப் பகுதியில் ...யினர் தமது நிலையை ...படுத்தியதைத் தவிர வேறு எந்த இராணுவ நடவடிக்கையும் கடந்த மாதம் மேற்கொள்ளப்படவில்லை''

இவ்வாறு பிரிகேடியர் ஜெயவர்தனா நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## அராலியில் படையினர் சூடு

அராலி வேலணைத் துறைப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று நண்பகல் துப்பாக்கிப் பிரயோகத்தையும் ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். (01)

### ஷெல் தாக்குதல்

நேற்று மாலை 5 மணியளவில் காரைநகரில் இருந்து இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்கள் பல மூளாய் வெளிகளில் விழுந்து வெடித்தன.

இதனால் உயிர்ச்சேதங்களோ, பொருள்சேதங்களோ ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (18)

## வெளியேறிய படைமீது பள்ளிக்குடாவில் தாக்கு

நேற்றுக் காலை மன்னார் பள்ளிக்குடா முகாமிலிருந்து வெளியேற முயன்ற இராணுவம் மீது புலிகள் தாக்குதல் நடாத்தினர்.

முகாமிலிருந்து 350 யார் தூரத்தில் வைத்து படையினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தவே படையினர் முகாமிற்குத்திரும்பிச் சென்றனர்

## பாக். பிரதமர் ஷெரீப் வருவதும் உறுதியாகியதாம்

7 ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறும் சார்க் மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் நவாப்ஷெரீபும் கலந்து கொள்வார் என்பது உறுதியாகிவிட்டதாக ஸ்ரீலங்கா அரச வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

## போக்குவரத்துத் தடை; அரச ஊழியர் அவதி

கேரதீவு - சங்குப்பிட்டி போக்குவரவு தடைப்பட்டுள்ளதால் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்கள், அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து திரும்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோல கடமையின் நிமித்தம் கொழும்பு சென்ற

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மேற்காசிய சமரச மாநாடு; சீனா பொருட்படுத்தவில்லை

...யின் தலைநகர் மட்...ல் நடைபெற்று வரும் ...ற்றுமுக்கியத்துவம்மிக்க ...காசிய பிராந்திய சமா... மாநாடு பற்றி சீனா ...வளவாகப் பொருட்...தவில்லை என்று ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

உலக நாடுகள் பலவற்றின் தினசரிகளும் இம் மாநாட்டுக்கு முக்கியத்துவமளித்து வருகின்றபோதிலும் சீனப் பத்திரிகைகள் மாநாட்டைப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இவர்களுக்கு விசேட அட்டை

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரிய பயிற்சிக் காலசாலை மாணவர் ஆகியோருக்கென விசேடஉணவுப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

### உள்நாட்டு - அந்நியசக்திகள்

## தன்னைக் கொலல திரைமறைவு சதி என்கிறார் பிரேமதாஸ

''என்னைக் கொலை செய்வதற்கு உள்நாட்டிலுள்ள சக்திகளுடன் சேர்ந்து அந்நிய சக்திகளும் திரைமறைவில் சதிசெய்து வருகின்றன. நடப்பது எதுவாயிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை''

இவ்வாறு தென்னிலங்கையில் நடைபெற்ற ஐ. தே. க. கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஸ்ரீலங்கா ஜனாதிபதிரணசிங்க பிரேமதாஸ கூறியதாக ஏஜென்ஸிச் செய்திகள் நேற்றுத்தெரிவித்தன.

● பிரான்ஸ்-ஜேர்மனி நட்பு-நாடுகளாகின

● கிழக்கு-மேற்கு ஜேர்மனிகள் இணைவு

● ரஷ்ய-அமெரிக்க கெடுபிடி விலகியது

● இஸ்ரேல்-எகிப்து சமாதான உடன்பாடு

# இஸ்ரேல் - அரபு நாடுகளிடையே நட்புறவு மலர்வது

# தவிர்க்க முடியாதது என்கிறார் ஜனாதிபதி புஷ்

'மத்திய கிழக்கில் சமாதானம் நிச்சயம் ஏற்பட்டே தீரும்' இவ்வாறு அரபு - இஸ்ரேல் சமாதான மகாநாட்டை நேற்று முன்தினம் ஸ்பெயின் - மட்றிட்டில் ஆரம்பித்துவைத்து உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்தார்.

'கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலமாகக் கடும் பகைகொண்டிருந்த பிரான்ஸும், ஜேர்மனியும் இரண்டாம் உலகப் போரின் பின் நட்பு நாடுகளாக மாறுமென்று யார் நினைத்தார்கள்? பெர்லின் சுவரை இடித்து விழுத்தி கிழக்கு மேற்கு ஜேர்மனிகள் ஒன்றிணையுமென்று யார் எதிர்பார்த்தார்கள்? அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே நீண்ட காலமாக நிலவி வந்த கெடுபிடிப் போர் விலகி இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவும் சமாதானமும் ஏற்படுமென யார் முன்னர் எதிர்பார்த்தார்கள்?'

'பழைய எதிரிகள் சமாதானம் செய்து கொள்ளலாமென்பதற்கு எகிப்து - இஸ்ரேல் சமாதான உடன்படிக்கை வலுவுள்ள உதாரணம். இஸ்ரேல் - அரபு சம்பந்தப்பட்ட இரு தரப்பும் சந்திப்பதன் மூலம் இந்த சமாதானக் கனவு நனவாகியே தீரும்' என புஷ் தனது நீண்ட உரையில் மேலும் தெரிவித்தார்.

## பணமாக ஒய்வூதியம்

பண்டத்தரிப்பு பல நோக்குக்கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி இப் பகுதியிலுள்ள ஒய்வூதியம் பெறுபவர்களுக்கான புரட்டாதி மாத ஒய்வூதியத்தை பணமாகக் கடந்த வாரம் வழங்கியுள்ளது (13)

## காணாமற்போனோர் விசாரணை வட, கிழக்கிலும் இடம்பெறும்

காணாமற் போனோர் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு வடக்குக் கிழக்கில் காணாமற் போனோர் பற்றியும் விசாரணை செய்ய இணங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த 11-01 91 க்கு முன்னர் வடக்குக் கிழக்குப் பகுதியில் காணாமற் போனோர் பற்றி இந்த ஆணைக்குழு விசாரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எங்களுக்கே தெரியவில்லை என்கிறார்கள் சி. பி. ஐ. அதிகாரிகள்

சென்னை மேற்கு மாம்பலம் பகுதியில் இயங்கிய விடுதலைப்புலிகளின் அலுவலகம் முற்றுகையிடப்பட்டு அங்கிருந்த 'வயர்லெஸ்' கருவிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக முன்னர் செய்தியொன்றை தமிழக அரசு வெளியிட்டிருந்தது.

இது குறித்து 'ஜூனியர் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ள குறிப்பொன்றில் 'அங்கு கைப்பற்ற பட்ட கருவிகளை இயக்கும் முறைகள் எங்களுக்கே தெரியவில்லை' என சி. பி. ஐ. அதிகாரி ஒருவர் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 292 பேருக்கு இன்று நியமனம் 40பேர் தமிழர்: 25பேர் முஸ்லிம்

போட்டிப் பரீட்சை மூலம் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 292 பேருக்கு இன்று முதல் அரச கூட்டுத்தாபன, வங்கி அலுவலகங்களில் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்த 292 பேரில் 225 பேர் சிங்களவர், 40 பேர் தமிழர், 25 பேர் முஸ்லிம்கள்.

புதிய விகிதாசார நியமன முறைக்கமையவே இவர்களின் தெரிவு இடம்பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## அதிகளவு விஞ்ஞான ஆசிரியர்கள் வட-கிழக்கில் நியமனம் பெறவாய்ப்பு!

வடக்கு கிழக்குப் பகுதியில் அதிகளவு கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் நியமனம் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளதாக கல்விசேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேபோன்று ஊவா, வட மத்திய மாகாணங்களிலும் அதிக கணித, விஞ்ஞான ஆசிரியர் நியமனத்துக்கு வெற்றிடங்கள் உள்ளன.

தற்போது விண்ணப்பம் கோரப்பட்டுள்ள இப்புதிய நியமனம் மாகாண அரச சேவை அடிப்படையிலானது என்றாலும் தாம் வசிக்கும் மாவட்டத்தைத் தவிர்ந்த வேறுமாகாணங்களுக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்க முடியும் எனினும் மேற்குறிப்பிட்ட மூன்று மாகாண சபைகளுக்குள் சேவையாற்றவிரும்புவர்களுக்கு நியமனம் பெறும் வாய்ப்பு அதிகமாகவுள்ளதாகவும் கல்விச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## ரயில் பயணிகள் தங்குவதற்கு வவுனியாவில் 'விருந்தினர் விடுதி'

வடபகுதியில் ரயில் பயணிகள் தங்குவதற்கென வவுனியாவில் புதிய 'விருந்தினர் விடுதி' ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இவ்விடுதி இயங்குகிறது

பயணிகள் கட்டணம் செலுத்தி அறைகளை ஒதுக்கிக் கொள்ள வேண்டுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

## பாறாங்கல்லுடன் ரயில் மோதி 35பேர் பலி; 20பேர் படுகாயம்

நேற்று முன்தினம் இரவு பெங்களூரில் இடம் பெற்ற ரயில் விபத்தொன்றில் 35 பேர் பலியானார்கள், 20 பேர் படுகாயமுற்றனர்.

பெங்களூரிலிருந்து மாலை 6. 30 மணிக்குப் புறப்பட்ட 'பெங்களூர் - டில்லி - கருனாடகா எக்ஸ்பிரஸ்' 60 கிலோமீற்றர் தொலைவில் பாதையின் மேல் சரிந்து கிடந்த பாறாங்கல்லுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

## 6 மாதத்தில் 287 படகுகள் கைப்பற்றப்பட்டதாக அறிவிப்பு

கடந்த ஆறு மாத காலத்தில் 287 படகுகள் பாக்கு நீரிணைப் பகுதியில் இந்திய கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதாகத் தமிழக அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

இப் படகுகளிலிருந்த 185 பேர் கைது செய்யப்பட்டதாகவும் இக் காலப்பகுதியில் சுமார் 25 ஆயிரம் படகுகள் கடற்படையினரால் சோதனையிடப்பட்டதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரவேற்பு

இம்மாதம் 7-ம் திகதிமுதல் 9 -ம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள ஆறாவது சார்க் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வரும் நாட்டுத் தலைவர்களுக்கு செங்கம்பள வரவேற்பு வழங்கப்படவுள்ளது.

## கொம்படி வெளிப்பாதையில் இடுப்பளவுக்கு வெள்ளம்

கடந்த 29 ஆம் திகதியிலிருந்து கொம்படிப் பாதையில் 7 மைல் நீளப்பகுதி வரை இடுப்பளவிற்கு நீர்மட்டம் உயர்ந்து உள்ளது

வள்ளம் மூலமாகவே இப் பகுதியைத் தற்போது கடக்க முடிகிறது.

## ★ பொருளாதார நெருக்கடியை மத்திய வங்கி ஒத்துக்கொள்கிறது

# 4 மாத இறக்குமதிக்குத் தேவையான செலாவணி மட்டுமே கையிருப்பில்!

அந்நியச் செலாவணியில் பெரும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என அரசு தெரிவித்து வருகின்ற போதிலும் உண்மை நிலை அதற்கு மாறாகவே யுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையை ஆதாரமாக வைத்துப் பொருளியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மத்திய வங்கி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையொன்றில் நான்கு மாத இறக்குமதிக்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணி மட்டுமே தற்பொழுது கையிருப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திறந்த பொருளாதாரக் கொள்கையினால் இறக்குமதி அதிகரித்துள்ளமை, ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு என்பன இந்தச் செலாவணிப் பற்றாக்குறைக்கு முக்கிய காரணமெனவும் பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## வெளிநாட்டுப் பயணத்திற்கான செலாவணி அதிகரிப்பு!

அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கொள்கையை மத்திய வங்கி மேலும் தளர்த்தியுள்ளது.

இதற்கமைய வெளிநாடு செல்லும் இலங்கையர்களுக்கான வெளிநாட்டுச் செலாவணி 2500 டாலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது இந்த புதிய நடைமுறை இன்று முதல் அமுலுக்கு வருகின்றது.

எனினும் தென்னாசிய நாடுகளுக்குப் பயணம் செய்வோரின் செலாவணியில் மாற்றமெதுவும் இருக்காது எனவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## பணம் கண்டெடுப்பு

23- 10- 91 ஆம் திகதி சி. எம் எஸ். ஒழுங்கை கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த முருகானந்தன் சுதர்சன் என்பவரால் வீதியில் குறிப்பிட்ட தொகைப் பணம் கண்டெடுக்கப் பட்டு விடுதலை புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

## 10 கிலோ அரிசியில் 100 கிராம் கல்!

தற்போது நிவாரணத்துக்கு வழங்கப்பட்டு வரும் அரிசிக்குள் பெருமளவு கல் இருப்பதாக பாவனையாளர்கள் கூறுகின்றனர். அண்மையில் வலிவடக்கைச் சேர்ந்த ஒருவர் 10 கிலோ அரிசிக்குள் சுமார் 100 150 கிராம் வரையில் கல் இருந்ததாகக் கூறினார் பெரும்பாலான மக்கள் இந்த அரிசி பாவனைக்கு உகந்தது அல்ல என கூறுகின்றனர் (22)

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்- சைவபரிபாலனசபை 3 - 11 -91ல் நடாத்தவிருந்த சைவசமய பாடப்பரீட்சை 10 - 11 - 91க்கு பிற்போடப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு தோற்றும் பாடசாலைகளுக்கு சுட்டிலக்கங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## லங்கா கார்டியனும் ஏற்றுக்கொள்கிறது

உலகிலேயே அதிசக்தி வாய்ந்த விடுதலை இயக்கம் விடுதலைப் புலிகள் இயக்கம் தான் என லங்கா கார்டியன் என்னும் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

60000 இந்தியப் படைகளுடன் 1987 முதல் 1989 வரை போராடியதன் மூலம் இவர்கள் தமது பலத்தை நிரூபித்துள்ளனர். என மேலும் குறிப்பிட்டுள்ளது. (22)

# 50க்கும் மேற்பட்ட சைக்கிள்களை ராணுவம் தீவைத்து கொளுத்தியது

மண்ணித்தலைப்பகுதியில் பொது மக்கள் கைவிட்டுச் சென்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட சைக்கிள்களை அங்குள்ள இராணுவத்தினர் தீவைத்துக் கொளுத்தியதாக அங்கிருந்து தப்பி வந்த ஒருவர் தெரிவித்தார்.

மண்ணித்தலை புனித செபஸ்தியார் தேவாலயத்தின் முன்பாக இந்த சைக்கிள்களைக் குவித்த படையினர், பெற்றோலை ஊற்றிக் கொளுத்தினர்.

### மீனவ வள்ளங்கள் படையினர் பாவிப்பில்

மீனவர்களின் இருபத்து நான்கு வள்ளங்களையும் படையினர் தமது தேவைக்கு பயன்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

### மாட்டுவண்டிகளும் படையிடம் சிக்கின

மாட்டுவண்டிகள், பத்துக்குமேற்பட்ட உழவு யந்திரங்கள், ஆறு மோட்டார் சைக்கிள்கள் என்பனவும் படையினரிடம் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வயோதிபர் மீதும் துன்புறுத்தல்

கௌதாரி முனைக்கு வந்த படையினரிடம் சிக்கிய பதினைந்து ஆண், பெண் வயோதிபர்கள் துன்புறுத்தலின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை வீடுகளில் இருந்து கூட்டிச்சென்று மண்ணித்தலை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் வைத்திருந்து துன்புறுத்திய படையினர் பல்வேறு கேள்விகளைக் கேட்டு பின்னர் விடுவித்தனராம்.

### சங்கக் கிளை சூறையாடப்பட்டது

பூநகரி பல நோ. கூ. சங்கத்துக்கு சொந்தமான மண்ணித்தலைக் கிளை இராணுவத்தினரால் சூறையாடப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி பீரங்கித் தாக்குதல் நடாத்தப்பட்டபோது இக்கடை சேதமடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

பொதுமக்களுக்கு வழங்கவிருந்த உலர் உணவுப் பொருள்களே படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன.

### 14 மைல் பகுதியில் இராணுவம்

கௌதாரிமுனையில் கடந்த 22 ஆம் திகதி வந்து இறங்கிய படையினர் பூநகரி, வெட்டுக்காடு, கௌதாரிமுனை வினாசியோடை, மண்ணித்தலை, கல்முனை ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ளனர்.

இப்பகுதிகள் பதினான்கு மைல் பிரதேசம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### 300 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன

இங்கு முந்நூறு குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களில் 86 மீனவர் குடும்பங்களும், 88 விவசாயக் குடும்பங்களும், 50 சீவல் தொழிலாளர் குடும்பங்களும் அடங்குவர் ஏனையோர் தினமும் கூலிவேலை செய்பவர்களாவர். (07)

# பாஷையூர் மீனவர் மீது நேற்று அதிகாலையும் தாக்குதல்

நேற்று அதிகாலை பாஷையூரில் இருந்துபரவைக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற படகொன்றின் மீது மண்டைதீவில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் படகில் சென்ற எல்வின், எடின் ஆகிய இரு மீனவர்களும் மயிரிழையில் உயிர் தப்பினாலும் அவர்களது படகு சேதமுற்றது.

இதனையடுத்து தொழிலுக்குச் சென்ற வள்ளங்கள் அனைத்தும் உடனடியாகக் கரைதிரும்பின.

இராணுவ நடவடிக்கையினால் ஆழ்கடல் மீன்பிடித்தலை தவிர்த்து பரவைக் கடலில் தொழில் செய்து வரும் கடற்றொழிலாளர்கள் இத்தாக்குதலினால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (16)

## கண்டெடுக்கப்பட்ட ஆ. அ. அட்டைகள்

கண்டெடுக்கப்பட்டு முரசொலி ஆசிரிய பீடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டைகளின் விவரம் வருவாறு:-

வண்ணார்பண்ணை பிலிப்பையா மாசிலாமணி, தன்னீரூற்று ரமணி ஆறுமுகம் (536762418X) அல்லைப்பிட்டி சச்சிதானந்தன் கஜவல்லி (645443241V) யாழ்ப்பாணம் இராசதுரை மகேஸ்வரன் (710701164V, யாழ்ப்பாணம் திருநீலகண்டம் பாலேந்திரன் (701462068V) கீரிமலைசபாரத்தினம் நாகேந்திரம் (511033896X) யட்டியாந்தோட்டை சண்முகலிங்கம் தர்மலிங்கம் (282910594V) பருத்தித்துறை பாலகிருஷ்ணன் பாலச்சந்திரன் (692890892V)

(தொடரும்)

# கைதுசெய்யப்பட்ட மீனவர்களை மீட்டுத்தர சங்கம் கோரிக்கை

குடாநாட்டுக் கடலில் கல்முலை, மண்டைதீவு, புங்குடுதீவு, புளியந்தீவு, மான்தீவு, அரியாலை, பளளிக்குடா, மூன்றாம் பிட்டி, இரணைதீவு, பள்ளக்கரை, மண்ணித்தலை பகுதிகளில்படையினரின்யுத்த நடவடிக்கைகளினால் கடந்த 20 தினங்களாக எதுவித வருமானமுமின்றிப் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையம் யாழ் அரச அதிபரை அவசர மகஜர் மூலம் கோரியுள்ளது.

★ இராணுவ நடவடிக்கையினால் காணாமற்போன, கைதுசெய்யப்பட்ட மீனவர்களை மீட்டெடுத்தல்

★ படையினர் கைப்பற்றிய மீன்பிடி உபகரணங்களை மீளப்பெறுதல்.

★ அழிவுகளுக்கு நஷ்டஈடு வழங்கல் ஆகியனவற்றுக்கும் நடவடிக்கையெடுக்குமாறு இச்சங்கம் அரச அதிபரைக் கோரியுள்ளது. (16)

# 100 கோடி அமெரிக்க டாலரை உதவியாகக் கோருகிறது இலங்கை

உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து 100 கோடி அமெரிக்க டாலர் பெரும் தொகையை இலங்கை உதவியாகக் கோரியுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை யொன்று தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது இந்தக் கூட்டத்திலேயே இலங்கைக்கான உதவி பற்றி இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

இலங்கை அதன் சரித்திரத்தில் இவ்வளவு பெரும் தொகையை உதவியாகக் கோரியுள்ளமை இதுவேமுதற் தடவை என அப் பத்திரிகை தெரிவித்துள்ளது. ஆனால் இதனை நிதியமைச்சு மறுத்துள்ளது.

# லலித்தை நாடிவரும் புலனாய்வுத் துறை அதிகாரிகள்

முன்னாள் அமைச்சரும் ஐதேக அதிருப்தியாளர் குழு முக்கியஸ்தருமான லலித் அத்துலத் முதலி தனது பாதுகாப்புக் குறித்து மீண்டும் அச்சம் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களைப் போல் புலனாய்வுப் பிரிவினர் பலரும் தன்னிடம் வந்து போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இருப்பினும் நான் அவர்களுக்கு எவ்வித வேறு பாட்டையும் காட்டுவதில்லை, இன்முகத்துடனேயே வரவேற்கிறேன், அவர்களின் சந்தேகங்களை தீர்க்கும் முகமாக கேட்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்கின்றேன் என்கிறார் லலித். (22)

## பவள விழா

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பெற்று எழுபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. இவ்வித்தியாலயத்தின் கடந்தகால ஸ்யத்தகு பணிகளை ஞாபகஞ் செய்யும் வகையில் பவளவிழாவொன்றை நடத்துவதற்குக் குறித்த பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் ஆரம்ப நடவடிக்கைகளை எடுக்கவிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## உ.அ.அ. கல்லாறில் புதிய பிரிவு

மட்டக்களப்பில் புதிதாக மேலுமொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஏற்படுத்தப்படவுளளது

துறை நீலாவணை முதல் கோட்டைக் கல்லாறு வரை உள்ள பகுதிகளை உள்ளடக்கியதாக இப் புதிய பிரிவு அமைக்கப்படும்.

கல்லாறு உதவி அரசாங்க அதிபர் பிரிவு எனஇது அழைக்கப்படும்.

நாதஸ்வரமேதை என். கே. பத்மநாதன் அவர்களின் மணிவிழாத் தொகுப்பு - தொடர்:6

# நாதயோகிக்கு நல்லையில் பெருவிழா!

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் குழந்தை சண்முகசுந்தரம் அவர்கள் புல்லை நறுக்கிய வில்லை வைத்துச் சாதனை புரிவது நாதஸ்வரம். அது பாடல், கவிதை, பரதம் போன்றவற்றுடனும் இணைந்தது என்று கூறிப் பின்னர் மகாகவியின் கோடை இசை நாடகத்தில் வந்த பகுதி ஒன்றை எடுத்துக்காட்டி பத்மநாதக் கலைஞரே நீரும் வாசித்துக் காட்டி எம்மைக் கவர்ந்தீர், ஆதலால் நானும் வாசித்துக் காட்டுகிறேன் என்றார் சோமு என்ற நாதஸ்வரக் கலைஞனின் வாசிப்பில் தம்மை இழந்த பஞ்சையர் என்ற ரசிகர்.

'அஞ்சுகிறேன் அப்பா இது மனித சாதனையை
விஞ்சியதுதெய்வம் இது; இல்லைப் பிசாசுதான்.'

என்றும் அலைகின்ற மென் காற்றாய்ப் பேசும் மழலையாய் அருவிமிழற்றும் இன்னிசையைத் தொடங்கியநாதஸ்வரகானம் பின்னர் துழனி, ஓசை, அமலை, தமரம் என வேகங் கொண்டு, ஆழிக் குமுறலாய், ஊழிக் கதறலாய் முழங்கி நின்றதையும், தாத்தாவுக்குத் தருமபுர ஆதீனம் போர்த்திய பொன்னாடையைச் சோமுவுக்குப் பஞ்சையர் போர்த்திய செய்தியையும் நாடகக் கலைஞர்க்குரிய பாணியில் எடுத்துரைத்தார். பஞ்சையர் 'ஊதப்பா சோமு' என்றதுபோல நாமும் 'ஊதப்பா பத்மநாதா அந்நியர் கொடுமை நீங்க' என்று கேட்க முழங்கும் நாதஸ்வரம் ஏ கே 47 ஐ நினைவூட்ட வேண்டும் என்றார்.

வீரமணி ஐயர் வாழ்த்துப்பாடல்களை வெவ்வேறு இராகங்களிலும் இறுதிப் பாடலில் மங்களம் என்ற சொல் மீண்டும் மீட்டும் வரவைத்தும் பாடி வாழ்த்தியமை பாராட்டுக்குரியதாகும்.

கலைஞர் பொன். மதிமுகராசா அளவெட்டிப் பத்மநாதன் என்றுதான் ஏன் கூறவில்லை என்பதற்கு, அவர் தமிழ் ஈழ மண் முழுவதற்கும் உரியவர் என்பதே காரணம் என்று கூறி நலம் எலாம் பெருக வாழ்த்தும் உரைத்தார். கலைக் கல்லூரிக்கு இடம் தேடிய சேர். பொன் இராமநாதன் அளவெட்டியில் இருந்து கோண்டாவில் வரை கலைஞர்கள் இருப்பதைக் கண்டே மத்தியஸ்தானமாக விளங்கிய மருதனாமடத்தில் கல்லூரியை நிறுவினார் எனப் புதிய காரணங் காட்டியமையும் குறிப்பிடத்தக்கது.

மல்லாவி தேவஸ்தானத்தினர் பத்மநாதனுக்கு 'சங்கீத சரபம்' எனப் பட்டமளித்துப் பாராட்டுப்பத்திரமும் வாசித்தளித்தனர். தங்கப்பதக்கம் சூட்டியும், மலர்மாலைகள் அணிந்தும் தமது அன்பைத் தெரிவித்து நின்றனர்.

கும்பளாவளைத் தேவஸ்தானத்தின் சார்பில் குருக்களின் மகன் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்.

ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் கழகத்தினர் பாராட்டுப்பத்திரமொன்று வாசித்தளித்தனர்.

உதயன்—சப்றா நிறுவன முகாமையாளரும், துணைவியும் தங்கப்பதக்கம் அணிந்து போற்றினர்.

கம்பன் கழகத்தினர் கலைஞர் பத்மநாதனுக்கு ''நாதஸ்வர சக்கரவர்த்தி'' என்ற பட்டத்தைச் சூட்டினர். சக்கரவர்த்தி என்றதும் சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் கலைஞனுக்கு கழகச் சார்பில் முடிபுனைந்து மகிழ்ந்து நின்றார். ''மகாராணி'' உரிமையாளர் சோமசேகரம் பொன்னாடை போர்த்தினார் நாதஸ்வரக் கலைஞர் பஞ்சமூர்த்தி, மாலை சூட்டினார். நகைக்கடை உரிமையாளர் நீர்வேலி சோதிலிங்கம் அவர்கள் கேடயம் வழங்கினார். கலட்டி அம்மன் கோவிலடியில் வசிக்கும் தர்மராசா பதக்கம் சூட்டி அணிசெய்தார்.

இசைக்கலைஞர் திலகநாயகம் போல் அவர்களும், இசைத்துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் கணபதிப்பிள்ளை அவர்களும் பொழிந்த இன்னிசை மழையில் யாவரும் நனைந்து இன்புற்றனர்.

இறுதி நிகழ்ச்சியாகப் ''பெண்மை ஆற்றலிற்பெரிதும்சிறந்தவள் சீதையா? கண்ணகியா?'' என்றபொருளில் பட்டி மன்றம் நிகழ்ந்தது. கம்பன்கழக உறுப்பினர்கள் அறுவர் பங்கு பற்றினர். திரு இ ஜெயராஜ் அவர்கள் நடுவராக அமர்ந்திருந்தார்.

பட்டி மன்றத்தில் நிகழ்ந்த வாதப்பிரதிவாதங்களை சபையினர் மிகுந்த ஆர்வத்தோடு கேட்டு ரசித்தார்கள்.

கண்ணகியின் பெண்மையாற்றலே சிறந்து காணப்படுகிறது என நடுவர் ஜெயராஜ் தீர்ப்பு வழங்கினார்.

பட்டி மன்றத்துடன் விழா நிறைவெய்தியது.

அறுபது ஆண்டு நிறைவு கண்ட தம்பதியரை மக்கள் கூட்டம் சூழ்ந்து மகிழ்ச்சிப் பிரவாகத்தில் ஆரவாரம் செய்து குதூகலித்தது.

மணிவிழாக் கண்ட மன நிறைவோடு மண்டபத்திலிருந்து வெளியே வருகையில்,

''ஏழு சுரங்களினால் ஒரு பொன்னுலகு
இயற்றி மூருகனைக் கொலுவில் இருத்தியோன்
மேலை உலகும் வியந்திடுமாறு - கை
வீசி நடந்த கலைஞர்கள் நாயகன்''

என்ற கவிஞர் சோ. பவின் இசைப்பா காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

பெரும் கஷ்டங்கள் மத்தியிலும் இந்த மணிவிழாவை மாபெரும் கலை விழாவாக அமைத்த விழாக்குழுவில் பணியாற்றிய பின்வருவோர் பாராட்டுக்குரியவர்கள்:—

தலைவர்:- இ. ஜெயராஜ் அமைப்பாளர், கம்பன்கழகம்

இணைச் செயலாளர்:- சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம்
நாதஸ்வர வித்வான் வீ. கே. பஞ்சமூர்த்தி

பொருளாளர்:- நாதஸ்வர வித்வான் ஆர் கேதீஸ்வரன்

உறுப்பினர்:- சிவஸ்ரீ மகாதேவக்குருக்கள், பிரம்மஸ்ரீ ஜெயந்திக் குருக்கள், ம சிவராசா, முரசொலி ஆளுநர் நாயகம், க சோமசுந்தரம். மஹாராணி ரெக்ஸைரெக்ஸ், ஆ சிவரத்தினம் ஆசாரியார் திருநெல்வேலி, இ. சுரேஷ், ஹரன் ரெக்ஸைரக்ஸ், திருநெல்வேலி. சிவதர்மவளளல் க. ஆறுமுகம், நல்லூர், (முற்றும்)

# அரியாலையில் இருநூறு குடும்பங்கள் தஞ்சம்

குழமுனை, தாளையடி, செம்பியன்பற்றுப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து 200 குடும்பங்கள் அரியாலை அமல அன்னை அன்பகத்தில் தஞ்சமடைந்துள்ளன.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை மனித முன்னேற்ற நடுநிலையம், செஞ்சிலுவை சங்கம் என்பன மேற்கொண்டுள்ளன.

இவர்களுக்கு திருச்சிலுவைக் கன்னியர் மடச் சகோதரிகள் சுகாதார உதவிகளைச்செய்து வருகின்றனர். (33)

# விசேட அனுமதி இருந்தால் மாத்திரமே சான்றிதழ்

யாழ் செயலகத்தில் பிறப்பு இறப்புச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்தவர்களில் மேலதிகப் பதிவாளரிடம் விசேட அனுமதி பெறுபவர்களுக்கே தற்போது சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

அனுமதி பெறாத பலர் மேலதிக பதிவாளர் அலுவலகத்துக்கு தினமும் வந்து ஏமாற்றத்துடன் செல்வதைக் காணமுடிகிறது.

போதிய சான்றிதழ்ப் படிவங்கள் இல்லாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதனால் அடுத்த ஆண்டு பாடசாலைக்கு பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு பெற்றோரும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (06)

# விண்ணப்பப்படிவம் அனுப்ப அனுமதி மறுப்பு

தேசிய அடையாள அட்டையை புதுப்பிப்பதற்கான விண்ணப்பப படிவங்களை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கும் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அனுமதி மறுத்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

1972 ஆம் 1973 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட அடையாள அட்டைகளை புதுப்பிக்க ஆட்பதிவுத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால் யாழ் மாவட்டத்திற்கு போதிய விண்ணப்பப் படிவங்கள் கிடைக்காததால் அவற்றை அனுப்பமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்திற்கு 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் பத்தாயிரம் விண்ணபபப்படிவங்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 25

முப. 10 முதல் இரவு 8 மணி வரை

# கூட்டுறவுச் சங்கக் கிளைகள் திறந்து செயற்பட ஏற்பாடு

ப.நோ.கூ. சங்கங்களின் பிரதான கிளைகள் பாவனையாளர் நலன்கருதி இனிமேல் முற்பகல் பத்து மணி முதல் இரவு எட்டு மணிவரை திறந்திருந்து கடமையாற்ற புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசிய தேவை கருதி குறிப்பிட்ட பிரதான கிளைகள் இந்த நேரப்படி இயங்கும் எனவும் அறியவந்துள்ளது.

உணவு விநியோகம்

# உத்தரவு பெற்ற வர்த்தக நிலையங்கள் மூலமாகவும்

ப.நோ.கூ. சங்கங்கள் மாத்திரமின்றி உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் மூலமாகவும், சீரான உணவு விநியோகத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய வர்த்தக நிலையங்கள் செயலற்ற நிலை நிலவியது குறிப்பிடத்தக்கது.

## தேவாலயத்தில் தஞ்சம்

அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களில் பதினைந்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரியாலை புனித பூ[illegible]தேயு தேவாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். (33)

## கனேடிய...

வவுனியா தடைமுகாமில் தமது அனுமதியை எடுத்துக் காட்டியும், இங்குவரப் படையினர் விடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இவர்கள் மீண்டும் கொழும்பு திரும்பிச் சென்றனர். (01)

## போக்குவரத்துத்...

துறை யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்கள், அதிகாரிகளும் இங்கு வரமுடியாத நிலையில் உள்ளனர். (06)

## ஆனையிறவு...

பூநகரி, பளை உதவி அரசஅதிபர் பிரிவுகளில் மட்டுமே இப்போது ஊரடங்குச் சட்டம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மீனவர்களை காணவில்லை

நாகபட்டினத்தில் இருந்து கடந்த சனியன்று கடலுக்குச் சென்ற 4 மீனவர்கள் காணாமற் போய் விட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இவர்களை தேடி 14 இந்திய கடற்படை படகுகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன.

## இவர்களுக்கு...

பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர்கள் தத்தம் நிர்வாகத்துடன் இது பற்றித் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப் படுகின்றது.

## மேற்காசிய...

பற்றிய செய்திகளுக்கு இடமளிக்கவில்லை என்றும் 'பீப்பிள்ஸ் டெய்லி' இதழ் மாத்திரம் உள் பக்கத்தில் மாநாடு பற்றி சிறு செய்தி ஒன்றினை பிரசுரித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது

பெரும்போகத்திற்கு

# 10 ஆயிரம் மெட்ரிக் தொன் உரம் தேவை; கிடைத்துள்ளதோ குறைவு

குடாநாட்டிற்கு பெரும்போகத்திற்கென பத்தாயிரம் மெட்ரிக் தொன் உரம் தேவைப்படுகின்றது.

ஆனால் இங்கு கிடைத்துள்ள உரம் மூவாயிரம் தொன் கூட இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் விவசாயச் செய்கை பெரிதும் பாதிப்புறும் நிலையில் உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகினறது.

இதற்கு மாற்று வழியாக இயற்கைப் பசளையை உபயோகித்தல் சாலச் சிறந்தது என்று அறிவுறுத்தப்படுகின்றது.

## உணவுப் பொருள் கையிருப்பு

நல்லூர் உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள சகலவர்த்தகர்களும் தமது தேவைக்கு மேற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை வைத்திருக்கும் எனையோரும் தமது கையிருப்பை 2. 11. 91 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்குமுன்னர் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் நல்லூர் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு செய்யத்தவறின் அப்பொருள்கள் பதுக்கல் பொருள்களாக கருதப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## நெருக்கடி...

டன் இயற்கையின் சீற்றமும் சொற்ப போக்குவரத்து கூட தடைப்படுத்தி விடுகின்றது.

சமூகப் பொறுப்பு

இந்த அசாதாரண சூழ்நிலையில் மக்களின் வாழ்க்கை முறை எப்படி அமையவேண்டும்? இவ்வினாவுக்கு விடை காணும் பொறுப்பு சமூகத்தில் சகல மட்டத்தினருக்கும் உண்டு.

பதுக்கல் அதிகரித்த, விலையேற்றம், சுய நல ரீதியில் வதந்திகளைப் பரப்பி மக்களைக் குழப்புதல் இவையெல்லாம் சமூகத் தீங்குகளாகும்.

இந்த வகையில் மக்களுக்கு சீராக உணவுப்பொருள்கள் கிடைத்திட யாழ் செயலகம் உ. அ. பிரிவு அலுவலகங்கள் கிராமசேவகர்கள் மற்றும் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியதாக ஆலோசனைகள் பெறப்பட்டன.

அடுத்து பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன

எமது மக்கள் முன்னணியும் கிராமரீதியில் நியாய விலையில் உதவும் கரங்கள் எனும் அமைப்பு ஊடாக மக்களுக்கு பொருள்கள் கிடைக்க வழி சமைத்தது.

நியாய விலையில் கூட மக்கள் அன்றாடம் பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் பொருளாதார வசதியின்றி உள்ள நிலைகாண்கின்றோம்.

எனவே உணவு நெருக்கடியை பரிபூரணமாகப் புரிந்துகொண்டு சகல தரப்பினரும் குறிப்பாக வர்த்தகர்கள் ஒத்துழைத்தால் சீரான உணவுப் பொருள் விநியோகத்தை நடைமுறைப்படுத்துவதில் முழுமையான வெற்றி காண்பது சாத்தியமே.

இக்கலந்துரையாடலின் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. ராஜனும் சமுகமளித்திருந்தார்.

# மக்கள் ஒத்துழைப்பினாலேயே நாம் வளர்ச்சியடைந்தோம்

ஆனையிறவு, மணலாறு போர்க்களங்களில் நேருக்கு நேர் நின்று போராடியமையால் எங்களது கணிசமான போராளிகளை நாம் இழக்க வேண்டியேற்பட்டது. தீவகம், பூநகரி, கௌதாரிமுனை போன்ற பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டபோதும் அவர்களை நாம் நேருக்கு நேர் எதிர்கொள்ளாமல் விட்டமை குறித்து நாடெங்கும் பல கதைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன கொழும்பிலும் பி. பி. ஸியிலும் இவ்விடயம் குறித்து அதிர்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது

எங்கள் போராளிகளின் இழப்புக்கள் அதிகம் ஏற்படாத வகையில் ஸ்ரீலங்கா இராணுவத்தை நிர்மூலப் படுத்துவதற்கான ஒரு புதிய யுத்த முறையினைக் கையாள்வதனாலேயே நாம் எதுவித எதிர்ப்பினையும் தெரிவிக்கவில்லை புலி பதுங்குகிறதென்றால் அதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்ததே!

தமிழீழ இணக்க மன்றுப் பொறுப்பாளர் திரு. நித்தியராஜ் அவர்கள் தலைமையில் நேற்று சுன்னாகத்தில் நடைபெற்ற ஆரம்ப நீதிமன்ற அங்குராார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இ. மாறன் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்கள்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஆயுதப் போராட்டத்திலும் அரசியற்துறையிலும் விடுதலைப்புலிகள் அபரிதமான வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டமைக்கு மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்களே மகத்தான காரணங்களாகும் அந்த நம்பிக்கை வீணடிக்கப் படாமல் இணக்க மன்றுகளிலே பங்கேற்கின்ற நீங்கள் நடந்து கொள்வது உங்கள் மீதும் இயக்கத்தின் மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்துவனவாக அமைய வேண்டும் என்றார்,

வலிகாமம் மேற்குப் பகுதியின் ஆரம்ப நீதிமன்ற உறுப்பினர்கள் திரு. மாறன் முன்னிலையில் உறுதியுரைவழங்கி நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர். 25

# அயோத்தியில் மசூதி மீது காவிக் கொடியேற்றம்

அயோத்தியில் சர்ச்சைக்குரிய பாபர் மசூதி மீது நேற்று ஒரு கும்பல் காவி நிறக் கொடிகளை ஏற்றினர்.

பொலிஸாரையும் மீறிச் சென்று இவர்கள் மசூதி கட்டிடம் மீது காவிக் கொடி ஏற்றினர். மசூதி கட்டிடத்திற்கும் சிறிது சேதம் ஏற்படுத்தப்பட்டது, சுற்றுமதில் பலத்த சேதமானது.

இது தொடர்பாக 40 பேர் கைதாகியுள்ளனர்,

# தீவுப்பகுதித் தபால்கள் தேங்கிக்கிடக்கின்றன

எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு பகுதி தபாலகங்களுக்குரிய தபால் பொதிகள் யாழ் பிரதம தபாலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

அண்மையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளாலேயே இவை தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதேபோல் யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்துள்ள தீவுப்பகுதி மக்களின் நன்மை கருதி யாழ் பிரதம தபாலகத்தில் உள்ள அல்லைப்பிட்டி, மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறைத் தபாலகங்கள்இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. 06,33

# தேங்கு பனம் பொருள் சங்க அங்கத்தவர்களுக்கு நிவாரணம்

தீவக இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த வேலணை தெங்கு, பனம் பொருள் சங்க அங்கத்தவருக்கும், ஊழியருக்கும் நிவாரணம் வழங்கப்படவுள்ளது

01-07-91 தொடக்கம் 17-10-91 காலப் பகுதியில் தொழிற்பட்ட சங்க அங்கத்தவருக்குத் தலா ஆயிரம்ரூபா வீதமும், ஊழியருக்கு தலா 500 ரூபா வீதமும் இடர்காப்பு நிதியில் இருந்து நிவாரண நன்கொடையாக வழங்கப்படுகின்றது.

தாவடிச் சந்தியில் கே. கே. எஸ். வீதியில் இயங்கும் தற்காலிக காரியாலயத்தில் வைத்து 28 10-91 முதல் மேற்படி நிவாரணப் பணம் வழங்கப் பட்டு வருகின்றது.

ஏற்கனவே சென்ற வருட தீவக இராணுவ நடவடிக்கையில் இறந்த சங்க அங்கத்தவருக்கு இடர்காப்பு நிதியில் இருந்து தலா 5000/- நன்கொடை வழங்கப்பட்டிருந்தது.

## மக்கள்...

பாகரன் தற்போதைய உணவுத் தட்டுப்பாட்டு நிலை குறித்து உணர்ச்சிவசப்பட்டுக் கூறியுள்ளார்.

தலைவருடனான சம்பாஷணையின் போது அவர் மேற்கண்டவாறு கூறிய தகவலை திரு. கோ. மகேந்திரராஜா நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளருடனான கலந்துரையாடலின் போது ஒரு கட்டத்தில் வெளியிட்டார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 1-11-91 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.